**தலைப்பு 253 – ஓய்வூதியத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 253 – ஓய்வூதியத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 29 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 187,619.35 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 180,286.55 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 7,332.80 மில்லியன் அல்லது 3.19 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 187,567.48 | 180,234.87 | 7,332.61 | 3.91 |
| மூலதனம் | 51.87 | 51.68 | 0.19 | 0.37 |
| **மொத்தம்** | **187,619.35** | **180,286.55** | **7,332.80** | **3.91** |

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக 02 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 15,800.00 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் ரூபா 15,213.30 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 96.29 சதவீதமாகும். விபரம் பின்வருமாறு.

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மதிப்பிடப்பட்ட வருமானத்தின் சதவீதமாக மிகை/ (பற்றாக்குறை) |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை/ (பற்றாக்குறை) | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20.04.01.00 | 9 800.00 | 10 049.80 | 249.80 | 2.55 |
| 20.04.02.00 | 6 000.00 | 5 163.50 | (836.50) | (13.94) |
| **மொத்தம்** | **15,800.00** | **15,213.30** | **(586.70)** | **3.71** |

**2.3 முற்பணக் கணக்கு**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 25301 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 38.88 | 33.38 | 21.88 | 26.10 | 130.00 | 104.63 |

## 2.4. கட்டுநிதிக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழான 7002/0000/00/0062/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 459.46 மில்லியன் தொகையாகும்.

## 2.5 பொதுவைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 04 பொதுவைப்புக் கணக்குகளின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.86 மில்லியன் ஆகும். விபரங்கள் பின்வருமாறு.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா மில்லியன்** |
| 6000/0000/00/0015/0133/000 | 0.07 |
| 6000/0000/00/0001/0114/000 | 0.31 |
| 6000/0000/00/0013/0113/000 | 3.88 |
| 6000/0000/00/0016/0103/000 | 2.60 |
| **மொத்தம்** | **6.86** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புகள்

ஓய்வூதியத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

## 3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i). | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii). | கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (iii). | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454 (2) |
| (iv). | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (v). | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |

### 3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவையில் ஈடுபட்டிருக்கும் போது மரணமடைந்த மற்றும் ஊனமுற்ற இராணுவத்தினருக்கு 55 வயது வரை சம்பளம் மற்றும் படிகளை செலுத்துவதற்காக பாதுகாப்பு கவச படையணி மற்றும் பொலிஸ் ஆகியவற்றுக்கு ரூபா 23,432.65 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த கொடுப்பனவுகளுக்குரிய செலவின அறிக்கைகள் மற்றும் நலனாளிகளின் எண்ணிக்கை மாற்றமடைதல் மற்றும் அவர்களின் ஓய்வூதிய இலக்கம் அல்லது விதவைகள் மற்றும் தபுதாரர் இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம், தங்கியிருப்போர் தொடர்பான தகவல்கள், உரிய பிரதேச செயலாளர் அலுவலகம் போன்ற சான்றுகள் ஓய்வூதியத் திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 16,967.71 மில்லியன் தொகையான ஓய்வூதிய கொடுப்பனவு செலவின விடயத்திற்கு மிகை விதிப்பாக்கப்பட்டிருந்தது. அந்த மிகை விதிப்பாக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஓய்வூதிய கொடுப்பனவுகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது

(இ) நடைமுறையல்லா அசைவுக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 2015 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 218.94 மில்லியன் மற்றும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 1,988.60 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் பௌதீக பெறுமதி ஆகியவற்றை பரீட்சிப்பதற்காக

நிலையானச் சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வங்கிக் கணக்கொன்றின் ஊடாக பணிக்கொடைகளை செலுத்துவதை தொடர்புபடுத்தி கட்டுப்பாட்டுக் கணக்கொன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 19,417.78 மில்லியன் கடன் மீதியின் சரியான தன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

(உ) மத்தியப்படுத்தப்பட்ட முறையில் திணைக்களத்தில் பேணிச் செல்லப்படும் வெளிநாட்டு ஓய்வூதிய பதிவேட்டு அறையின் கோவைகளிடையே கனடாவில் குடியேறிய 2773 ஓய்வூதியம் பெறுவோரில் 762 பேரின் மாதிரியொன்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன் போது ஓய்வூதியம் பெறுபவர் மற்றும் ஓய்வூதிய கோவை ஆகியவற்றுக்கிடையே மற்றும் ஓய்வூதியம் பெறுவோரின் கோவைகள் மற்றும் வெளிநாட்டு ஓய்வூதிய கொடுப்பனவு தரவுக்கட்டமைப்பு ஆகியவற்றிடையே தொடர்பொன்று பேணப்படாதிருந்தமையால், மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 1,841.77 மில்லியன் தொகையான வெளிநாட்டு ஓய்வூதிய கொடுப்பனவுகளை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு போதுமான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்டங்கள் மற்றும் இழப்புக்களின் கீழ் ரூபா 208.85 மில்லியன் தொகையான ஓய்வூதியம் கூடுதலாக செலுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலை முழுமையற்ற விதத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அவ்வாறு கூடுதலாக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

### 3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2016 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அக் கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 16,330 மில்லியனாக இருந்தது.

### 3.4 மிகை செலவினம்

பின்வரும் இரு செலவின விடங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டினை விஞ்சி பயன்படுத்தியிருந்தமையால், ரூபா 3,786.86 கூட்டுத்தொகையான மிகை செலவினமொன்று அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பினவருமாறு.

| செலவின விடயம் | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | மிகை செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 253-1-2-2-1502(21) | 35,200.00 | 38,964.54 | 3,764.54 |
| 253-1-2-3-1502 | 28.06 | 50.38 | 22.32 |
| **மொத்தம்** | **35,228.06** | **39,014.92** | **3,786.86** |

### 3.5 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.5.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 07 செலவின விடயங்கள் தொடர்பில் மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையின் காரணத்தால் நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயத்திற்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 5.6 சதவீதம் முதல் 22.37 சதவீதம் வரையான வீச்சிலான பெறுமானத்தினை கொண்டிருந்தது.

(ஆ) 2015 ஏப்ரல் 09 ஆந் திகதி முதல் ஓய்வூதிய பணிக்கொடை வங்கிக் கடனின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 253-1-2-1502 (11) செலவின விடயத்தின் கீழும் ரூபா 18,000 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அந்த செலவின விடயத்தின் கீழ் ரூபா 5,418 மில்லியன் அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 30 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. ஓய்வூதிய பணிக்கொடைகளை செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியினை பயன்படுத்தாமல் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 9,710.87 மில்லியன் வங்கிக் கடன் பெறப்பட்டிருந்தமையால் செலவின விடயத்தில் ரூபா 12,582 மில்லியன் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது.

#### 3.5.2 கணக்கு வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஓய்வூதிய பணிக்கொடை வங்கிக் கடன் வசதியின் கீழ் ஓய்வூதியம் பெறுவோருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த கடனுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,584.28 மில்லியன் தொகையான கடன் வட்டி செலுத்தப்பட்டிருந்தது. அந்த வட்டி செலுத்துகை 1601 செலவின விடயத்தின் கீழுள்ள கடன் வட்டியின் கீழ் கணக்கு வைக்காமல், 1502 செலவின விடயத்தின் கீழ் ஓய்வூதிய நலன் செலுத்தலின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக குடியரசின் நிதிக்கூற்றுக்களில் கடன் வட்டி செலவினம் ரூபா 1,584.28 மில்லியன் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஓய்வூதிய கணக்கெடுப்பொன்றினை மேற்கொண்டு மத்தியப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பின் சரியான தன்மையை உறுதிப்படுத்தியதன் பின்னர் கொடுப்பனவுகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது ஓய்வூதியங்களை செலுத்துவதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு ரூபா 437.54 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. திறைசேரியின் கணனி அச்சீடுகளின் பிரகாரம் அந்த செலவினம் ரூபா 413.76 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம், ரூபா 23.78 மில்லியன் தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஓய்வூதியம் பெறுவோருக்கு செலுத்தப்பட்ட மொத்த பணிக்கொடை தொகையினை அறவிடுவதற்கு முன்னர் மரணமடையும் ஓய்வூதிய நலனாளிகளிடமிருந்து அறவிடப்படாத பகுதி அரசிற்கு நட்டமொன்று எனினும், அவை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.6 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 21,872 மில்லியன் தொகையான ஏனைய வருமானங்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளாமல், மீளாய்வாண்டில் கட்டுநிதி எல்லை கணிப்பிடப்பட்டிருந்த

போதிலும், அந்த கட்டுநிதி எல்லையினை மிகைத்து ரூபா 21,968.52 மில்லியன் கூடுதலாக கட்டுநிதி கோரப்பட்டிருந்தது.

(ஆ) செயல்நிமித்த உப கட்டுநிதி குறித்த செயற்பாடு தொடர்பான மதிப்பீடொன்றின் அடிப்படையில் வழங்கப்படாமையால் 13 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 230,000 தொகை உரிய பணிகளுக்கு பயன்படுத்தப்படாமல் மீண்டும் காசாக தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவிற்காக ஓய்வூதியத் திணைக்களத்தால் புத்தளம் மாவட்ட செயலகத்திற்கு 2015 சனவரி மாதத்திற்காக ரூபா 47.27 மில்லியன் தொகை கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2015 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையிலும் ரூபா 47.27 மில்லியன் விளைவற்று மாவட்ட செயலகத்தில் காணப்பட்டது.

## 3.7 வருமானக் கணக்குகள்

-----------------------------------------

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 2 வருமானக் குறியீடுகளின் வருமான மதிப்பீடுகளைத் தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற செயற்பாடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. அவ்வருமானக் குறியீடுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வருமானக் குறியீட்டு இலக்கம் 20.04.01.00 - சமூகப் பாதுகாப்பு பங்களிப்புப் பணம் (மத்திய அரசாங்கம்)

---------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருமானக் குறியீட்டிற்குரிய ரூபா 9,800 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 10,050 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 102.5 சதவீதமாக இருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது ரூபா 12.94 மில்லியன் தொகை வருமானத்திலிருந்து மீளச் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதன் சரியான தன்மையை உறுதி செய்வதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மத்திய அரசாங்கத்திற்குரிய நிறுவனங்களிடமிருந்து மீளாய்வாண்டின் போது சமூக பாதுகாப்பு பங்களிப்புப் பணமாக ரூபா 10,049.80 மில்லியன் தொகை கிடைத்திருந்தது. மாதாந்தம் பெறப்பட்ட சமூக பாதுகாப்பு பங்களிப்புப் பணத்தை கடந்த மாதங்களுடன் ஒப்பிடும் போது, மாதாந்த விலகல் ரூபா 88.68 மில்லியனான மறைப் பெறுமதியிலிருந்து ரூபா 223.19 மில்லியன் வரையான நேர் பெறுமதியொன்று வரையான வீச்சளவில் அளவில் விலகலடைந்திருந்தது. இருந்த போதிலும் அவ் விலகலுக்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) மத்திய அரசின் வருமான கணக்கிற்கு ஓய்வூதிய திணைக்களத்தின் தலைப்பின் கீழ் மாதாந்தம் கிடைத்த சமூக பாதுகாப்பு பங்களிப்பு

பணத்தின் பெறுவனவு ரூபா 5,476,189 முதல் ரூபா 46,793,765 வரையான வீச்சிலான பெறுமானமொன்றினை கொண்டிருந்தது. அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் மத்திய அரசின் சமூக பாதுகாப்பு பங்களிப்பு பணத்தின் பெறுகைகள் ரூபா 35.97 மில்லியன் கூடுதலாகவும், மாகாண சபைகள் சமூக பாதுகாப்பு பங்களிப்பு பணத்தின் பெறுவனவு ரூபா 35.97 மில்லியன் குறைத்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) இலங்கை புகையிரத திணைக்களத்திற்குரிய 2007 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை 36 உத்தியோகத்தர்கள் சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்த காலப்பகுதிக்காக பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் வருமானக் கணக்குகளின் பட்டோலைகளுடனான அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருமானக் குறியீட்டு இலக்கம் 20.04.02.00 - சமூகப் பாதுகாப்பு பங்களிப்புப் பணம் (மாகாண சபை)**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) பங்களிப்பு பணம் சேகரித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சமூக பாதுகாப்பு முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பில் தரவுக் கட்டமைப்பொன்று ஓய்வூதியத் திணைக்களத்தால் பேணப்பட்டிருக்கவில்லை.

- சமூக பேணுகை பங்களிப்பு பண முறைமையின் கீழ் விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் மற்றும் பங்களிப்பு தொகைகளை மீள செலுத்தும் போது அந்தந்த நபர்களிடம் குறிப்பானதொரு பங்களிப்பு தொகை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததாக உறுதிப்படுத்தக்கூடிய உரிய நடைமுறையொன்று ஓய்வூதிய திணைக்களத்திடம் காணப்படவில்லை.

- வருமானக் கணக்கிற்காக மாதாந்தம் பல்வேறு நிறுவனங்களிலிருந்து சுமார் 630 காசோலைகள் கிடைத்திருந்தன. ஒவ்வொரு மாதமும் குறித்த நிறுவனங்களிலிருந்து குறித்த பங்களிப்பு தொகை சரியாக உரிய திகதிகளில் பெற்றுக்கொள்ளப்பட்டமையையும் நிலுவைகள் காணப்படுமாயின் அது தொடர்பில் வெளிப்படுத்தும் வகையில் உள்ளக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படும் வகையில் பெறுவனவு தலைப்புக்களின் படி வகைப்படுத்தி பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதிப்பிரமாணம் 128(2) (உ) மற்றும் 2015 யூலை 20 ஆந் திகதிய 1/2015 ஆம் இலக்கம் அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், சேகரிக்கப்பட்ட வருமானம் தொடர்பான அறிக்கைகளை போதியளவிலும் முறையாகவும் பேணிச்

செல்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- சமூக பாதுகாப்பு பங்களிப்பு முறைமையின் கீழ் பதிவு செய்து இலக்கமொன்றினை வழங்காமல் தற்போது அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து பங்களிப்பு தொகையினை சேகரித்த சந்தர்ப்பங்களைப் போன்று, தற்போது ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களுக்கு பங்களிப்பு தொகையினை செலுத்தி பதிவு செய்யப்பட்ட இலக்கமொன்றினை வழங்கப்பட்டிராத சந்தரப்பங்களும் காணப்பட்டன. கம்பஹா மாவட்டத்தின் பிரதேச சபைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் 04 பிரதேச சபைகளின் 280 ஊழியர்களுக்கு விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய இலக்கங்களை வழங்காமல் பங்களிப்புத் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது.

- மீள்கட்டமைக்கும் போது இலக்கங்களை வழங்குதல் தொடர்பில் வெளியிடப்பட்டிருந்த எந்தவொரு சுற்றறிக்கையும் விதவைகள் மற்றும் அனாதைகள் பங்களிப்பு முறைமையின் கீழ் பதிவு இலக்கமொன்றினை வழங்கியிராத ஓய்வூதிய நலனாளிகளுக்காக இலக்கங்களை பெற்றுக் கொடுப்பதற்காக வேலைத்திட்டமொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

**(ii) நிலுவை வருமானம்**

------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பங்களிப்பு பணப் பெறுவனவு தொடர்பான பதிவேடொன்று பேணப்படாதிருந்தமையால் 7 மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 285.98 மில்லியன் தொகையான நிலுவை வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. அந்த நிறுவனத்தினால் அறிக்கையிடப்பட்டிருந்த மொத்த பெறுமதி நிலுவை வருமானங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

- வருமானக் கணக்கினை தயாரிக்கும் போது மேல் மற்றும் மத்திய மாகாண சபைகளின் நிறுவனங்களுக்குரிய நிலுவை வருமானம் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- மாகாண சபைகளின் சமூக பாதுகாப்பு பங்களிப்பு தொகைகளாக திணைக்களத்திற்கு கிடைக்கும் பணம் மாதாந்தம் பல்வேறு பெறுமதிகளை கொண்டிருந்தது. மீளாய்வாண்டில் சமூக பாதுகாப்பு பங்களிப்பு பணமாக கிடைத்திருந்த தொகை ரூபா 5,163.76 மில்லியனாக இருந்தது. அந்த பெறுவனவுகளின் மாதாந்த விலகல் ரூபா 287.13 மில்லியன் ஆன மறைப் பெறுமதி தொடக்கம் ரூபா 138.41 மில்லியன் நேர்ப் பெறுமதி வரையான வீச்சினை கொண்டிருந்தது.

- மீளாய்வாண்டில் வருமானமாக கிடைத்திருந்த போதிலும் காசோலை சிதைவடைந்த மற்றும் காலாவதியாகுதல் போன்ற பல்வேறு காரணங்களால் கணக்கு வைக்கப்படாமல் நிறுவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்ட ரூபா 3.90 மில்லியன் கூட்டுத்தொகையான 33 காசோலைகளுக்குரிய பணம் நிலுவை வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(iii) பங்களிப்பு பணத்தை மீள செலுத்துதல்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நிதிப்பிரமாணம் 118(2)(ஆ) இன் பிரகாரம் வருமானங்களை மீள செலுத்தும் சந்தர்ப்பங்களுக்காக அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 604,324 தொகையான சமூக பாதுகாப்பு பங்களிப்பு பணம் வருமானத்திலிருந்து மீளளிப்பதற்குரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

- பங்களிப்பு பணம் செலுத்துவதை பன்முகப்படுத்தலின் கீழ் 2015 ஆம் ஆண்டின் போது 526 ஓய்வூதிய பெறுநர்களுக்கு ரூபா 23.98 மில்லியன் கூட்டுத்தொகை மீள செலுத்தப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 205 இன் பிரகாரம் மீளளிப்பு இரு முறை நிகழ்வதை தடுப்பதற்காக அந்தந்த நிறுவன மட்டத்தில் கொடுப்பனவுகள் சம்பந்தமான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

- மத்திய அரசில் மற்றும் மாகாண சபைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள இரட்டை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் பங்களிப்பு பண பெறுவனவுகள் தொடர்பில் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 3.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

25301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,422,351 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் 01 முதல் 24 ஆண்டுகள் வரையான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்ய திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 4,796 தொகையான மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.9.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய உப திட்டமொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான திட்டம் வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் மற்றும் அந்த செயற்பாடுகளின் எதிர்ப்பார்க்கப்பட்ட வெளியீடு / விளைவினை தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஓய்வூதிய நலன்களை செலுத்துதல் திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கையான போதிலும், ஓய்வூதியம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் நலன்களுக்கான உரித்தின் அடிப்படையில் குறித்த பிரிவிற்கு நலன்கள் விண்ணப்பமொன்றை சமர்ப்பித்தல் முதல் நலன்களை செலுத்துதல் வரையான நடைமுறையின் பணிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பினை சாட்டி கொடுப்பனவுகளின் பிரதிபலன்களை மதிப்பிடுவதற்கு இயலுமான வகையில் செயலாற்றல் குறிகாட்டிகளை தயாரித்து வருடாந்தம் செயன்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படும் வகையில் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9.2 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஓய்வூதிய நலனாளிகளுக்கு உரித்தான ஓய்வூதிய நலன்களை செலுத்தும் போது ஒரு ஓய்வூதியதாரருக்கு ஒரு மில்லியனுக்கு மேலதிகமான கொடுப்பனவு தொடர்பில் அங்கீகரிக்கும் மூவரடங்கிய குழுவின் ஒரு அங்கத்தவராக தலைமை உள்ளகக் கணக்காய்வாளரும் நியமிக்கப்பட்டுள்ளமையின் காரணத்தால் அந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வாளரின் சுயாதீனத்துவம் தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு துறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.9.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கூட்டத்தடவை காலண்டிற்கு ஒன்று வீதம் ஆகக் குறைந்தது 04 தடவைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 02 கூட்டத்தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டத்தின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மற்றும் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் திணைக்களத்திற்கு விடுக்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருக்கவில்லை.

**3.9.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள்

செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு அந்த அறிக்கைகள் 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை 2016 யூலை 09 ஆந் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

தகவல் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சிற்கு சொந்தமான மோட்டார் வாகனமொன்று 2015 சனவரி மாதம் முதல் முறையான அங்கீகாரமின்றி ஓய்வூதியத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்ததாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்தினால் தீர்க்கப்படாதிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 19,642.15 மில்லியன் ஆகும்.

(ii) பொறுப்புக்கள் கூற்றில் செலுத்த வேண்டிய பணிக்கொடை கடன் தவணையின் கீழ் அரச அங்கியொன்றிற்குரியதாக செலுத்த வேண்டிய கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 1,071,351 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 3.11 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 41 (1) | 32,760,325 | 150 மேசைக் கணனிகள், 300 மடி கணனிகள் மற்றும் 20 டெப்லட் கணனிகள் ஆகியவற்றை கொள்வனவு செய்யும் போது அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 | - | ஓய்வூதியங்களை கூடுதலாக செலுத்தியமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமல் கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையினை ஓய்வூதியதாரர்களிடமிருந்து அறவிடுவதற்கு மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 1646 | - | அமைச்சிடமிருந்த வாகனங்களுக்குரிய நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த அறிக்கைகள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) ஓய்வூதியச் சுற்றறிக்கை** | | |
| 2014 ஏப்ரல் 07 ஆந் திகதிய 1/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மத்தியப்படுத்தப்பட்ட ஓய்வூதிய கொடுப்பனவின் போது கட்டுப்பாட்டு கணக்கொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை** | | |
| 5.4.4 (i) வழிகாட்டி | - | மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றினைக் கொள்வனவு செய்யும் போதும் வீடொன்றினை நிர்மாணிப்பதற்கான பெறுமதியில் 20 சதவீத தொழிலாரம்பிப்பு முற்பணத்தினை செலுத்த முடியுமெனினும், அதற்காக 50 சதவீதமான ரூபா 1.67 மில்லியன் தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3.12 செயலாற்றல்

2014 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் 31 மேசைக் கணனிகள் மற்றும் 05 மடி கணனிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 2.99 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த எல்லையினை கருத்திற் கொள்ளாது 150 மேசை கணனிகள், 300 மடி கணனிகள் மற்றும் 20 டெப்லட் கணனி ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 32.76 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## 3.13 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலான குறைபாடுகள்

### சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

திணைக்களத்தின் வங்கிக் கணக்கொன்றுக்கு உரியதாக 2015 ஒக்தோபர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருந்த போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களைக் கடந்த ரூபா 510,009 கூட்டுப் பெறுமதியான காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396 (ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.14 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

### (அ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஓய்வூதிய பிரமாணக்குறிப்பின் 2 மற்றும் 25 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பணிக்கொடைகளை பெறுவதற்கு விருப்பத்தினை வெளியிட்டு ஓய்வூதிய பணிக்கொடையினை பெற்றுக்கொண்ட போது மொத்த பணிக்கொடை பணத்தில் 60 சதவீதம் மாத்திரம் அரசிற்கு தவணைகளாக மீண்டும் அறவிடப்படும். எவ்வாறெனினும், ஓய்வூதிய பணிக்கொடையினை பெற்றுக்கொள்வதற்கு விருப்பினை வெளியிட்டு பணிக்கொடையினை பெற்றுக்கொண்டிருந்த உயர் நீதிமன்றத்தின் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளிடமிருந்து அந்த 60 சதவீத அளவு மீண்டும் அறவிடப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுத் தெரிவு பரிசோதனையின் போது 5 நீதிபதிகளிடமிருந்து ரூபா 13.46 மில்லியன் கூட்டுத்தொகையான பணிக்கொடை பணம் மீண்டும் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

### (ஆ) பெறுகைகள் வழிகாட்டி நடைமுறையிலிருந்து விலகுதல்

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக விலை ஒப்பீட்டு முறை பயன்படுத்தப்பட்ட 07 சந்தர்ப்பங்களில் ரூபா 15.42 மில்லியன் தொகையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 3.15 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்திற்குரியதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக திணைக்களத்தால் சீர்செய்யப்பட்டிராத பந்திகளுடனான தொடர்பு பின்வருமாறு.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புபடுத்தப்பட்ட விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இல.** | |
| 2013 | 2.7 (அ) | ஈ - ஓய்வூதிய செயற்திட்டத்திற்காக சம்பளங்கள் மற்றும் படிகள், பயிற்சி செலவினங்கள் தவிர்த்து ரூபா 182.22 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2013 நவம்பர் 01 ஆந் திகதி முதல் அந்த செயற்திட்டம் முழுமையாக கைவிடப்பட்டிருந்தது. |

## 3.16 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) ஓய்வூதிய பணிக்கொடை வங்கி முறைமை மூலம் செலுத்துதல்

2014 ஏப்ரல் 09 ஆந் திகதி வரையில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய செலுத்த வேண்டிய 17,029 ஓய்வூதிய பணிக்கொடை விண்ணப்பங்கள் திணைக்களத்திற்கு கிடைத்திருந்தன. அவ்விண்ணப்பங்கள் தொடர்பாக முறைப்படி தகவல்களைப் பெற்றுக் கொள்ளாமல் வங்கி முறைமையை பயன்படுத்தி ஓய்வூதியம் பெறுவோருக்கு பணிக்கொடை அந்த ஓய்வூதியம் பெறுவோரின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும் 17,029 விண்ணப்பங்களிடையே உள்ள மாகாண சபைகளின் உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய காலக்கழிவு தொகையினை கருத்திற் கொள்ளாமல் ஓய்வூதியதாரர்களுக்கு பணிக்கொடைகள் முழுமையாக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 182 ஓய்வூதியம் பெறுநர்களுக்கு ரூபா 9.96 மில்லியன் கூட்டுத்தொகையான ஓய்வூதிய பணிக்கொடை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) வங்கி கடன் மூலமாக பணிக்கொடை செலுத்தப்படுவதனால் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த பணிக்கொடைக்காக 12 சதவீதம் மேலதிக வட்டியொன்று அரசினால் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) தாபனவிதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.2.3 ஆம் பிரிவின் பிரகாரம் ஒட்டுமொத்தமான கூடுதலான கொடுப்பனவுகளை உள்ளடக்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2015 ஆம் ஆண்டின் போது பணிக்கொடை கொடுப்பனவுகளுக்காக ரூபா 18,000 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதனை செலவிடாமல் பணிக்கொடை பணத்தை செலுத்துவதற்காக 2014 ஏப்ரல் 09 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 20,402.44 மில்லியன் தொகையான கடன் தொகை 3 அரச வங்கிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கான

வட்டியாக ரூபா 2,209.06 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மொத்த கடன் மீதி ரூபா 19,289.29 மில்லியன் ஆக இருந்தது.

(v) முதன் முதலாக ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் கடனின் கீழான பணிக்கொடை கொடுப்பனவினை அடிப்படையாக கொண்டு கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(vi) மத்திய அரசிற்கு உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அரசிற்கு அறவிடப்பட வேண்டிய காலக்கழிவு செலவினம் ஓய்வூதிய பணிக்கொடையினை செலுத்தும் சந்தர்ப்பத்திலேயே கணக்கு மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) யுத்தத்தின் போது மரணித்த மற்றும் வலது குறைந்த இராணுவ வீரர்களுக்காக வாழ்க்கைச் செலவின படியினை கூடுதலாக செலுத்துதல்**

---

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) யுத்தத்தின் போது மரணித்த மற்றும் வலது குறைந்த இராணுவத்தினருக்கு அவர்களின் 55 வருடங்கள் வரை சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவின படிகள் உள்ளடக்கப்பட்ட படிகளும், அதற்கு மேலதிகமாக ஓய்வூதியங்கள் மற்றும் விதவைகள் தபுதாரர் ஓய்வூதியங்கள் கொடுப்பனவுடன் மீண்டும் வாழ்க்கை செலவினப் படிகள் செலுத்தப்பட்டிருந்தமையால் வாழ்க்கை செலவினப் படிகள் இரு முறை செலுத்தப்பட்டிருந்தது. கப்பற்படை மற்றும் விமானப்படை உத்தியோகத்தர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டின் செப்தம்பர் மாதம் வரை யுத்தத்தின் போது மரணித்த மற்றும் வலது குறைந்த 337 இராணுவத்தினருக்கு ரூபா 22.05 மில்லியன் தொகையான பணம் வாழ்க்கை செலவினப் படிகளாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ஓய்வூதிய தரவுக் கட்டமைப்பு 2008 ஆம் ஆண்டு முதல் காண்பிக்கப்படுகின்றமையால் அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அவ்வாறான அனைத்து மேலதிக கொடுப்பனவுகளும் ஓய்வூதிய கோவைகளை பரீட்சித்தல் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 06/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக பாதுகாப்பு கவச அணியின் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்துடன் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த வாழ்கைச் செலவினம் படிகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பிரதேச செயலாளர் அலுவலகங்களில் ஓய்வூதியம் செலுத்துதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் இற்றைக்கு 10 வருடங்களுக்கு முன்பிருந்து வாழ்க்கைச் செலவினப்படிகள் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதனை சரி செய்வதற்கு போதியளவில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) ஓய்வூதிய பணிக்கொடைகளை கூடுதலாக செலுத்துதல்**

2014 ஆம் ஆண்டு முதல் பிரதேச செயலகங்களால் ஓய்வூதியம் செலுத்தும் போது, ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியங்களை கூடுதலாக செலுத்தல், இருமுறை செலுத்துதல் மற்றும் மோசடியான முறையில் செலுத்துதல் ஆகியவை இடம்பெற்றிருந்ததமை அவதானிக்கப்பட்டது. அந்த வழுக்களுடனான கொடுப்பனவுகளை தடுக்கும் நோக்கத்தின் அடிப்படையில் ஓய்வூதிய கொடுப்பனவினை மீள்கட்டமைத்தலின் கீழ் 2014 யூன் மாதம் முதல் நிலுவை ஓய்வூதியங்களை செலுத்துதலும், 2014 ஒக்தோபர் மாதம் முதல் முதலாவது ஓய்வூதியங்களை செலுத்தும், 2015 சனவரி மாதம் முதல் மத்தியப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பினை ஆரம்பித்து ஓய்வூதிய படிகளை செலுத்தலும், 2015 செப்தம்பர் மாதம் முதல் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியங்களை செலுத்துதலும் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 சனவரி மாதம் முதல் 2015 திசெம்பர் மாதத்தின் இறுதி வரையிலும் 31 ஓய்வூதியம் பெறுநர்களுக்கு இரண்டு தடவைகளுக்கு ரூபா 5.55 மில்லியன் தொகையான ஓய்வூதியமும், 134 ஓய்வூதியம் பெறுநர்களுக்காக இரண்டு தடவைகளுக்கு ரூபா 19.19 மில்லியன் தொகையான நிலுவைச் சம்பளங்களும் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ii) அடிப்படை சம்பளத்துடன் செலுத்தப்படும் உள்ளகப் படிகள், வாழ்க்கைச் செலவினப் படிகள் ஆகியன 2015/2016 ஆம் ஆண்டுகளில் குறித்த அளவினை விட ரூபா 105.67 மில்லியன் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மீள்கட்டமைக்கப்படுதல் மூலம் மத்தியப்படுத்தப்பட்ட ஓய்வூதிய கொடுப்பனவின் போது வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை உருவாக்காமை ஓய்வூதியங்களை கூடுதலாக செலுத்துவதற்கு காரணமாக அமைந்திருந்தது. அவ்வாறு இனங்காணப்பட்ட காரணங்கள் மற்றும் அபாயமான நிலமைகள் சில பின்வருமாறு

- ஓய்வூதிய கொடுப்பனவினை மீள்கட்டமைக்கும் நடைமுறை தொடர்பில் சாத்தியவள ஆய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

- பன்முகப்படுத்தல் மூலம் ஏற்பட்டிருந்த அனைத்து மிகைக் கொடுப்பனவுகள் மற்றும் மோசடிகள் ஆகியவற்றை இனங்கண்டு அரசாங்கத்திற்கு நேரக்கூடிய நட்டத்தினை குறைப்பதற்கு விசேடமான வேலைத்திட்டமொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

- மத்தியப்படுத்தப்பட்ட முறையில் ஓய்வூதியம் செலுத்துதல் தொடர்பில் பொருத்தமான திட்டமிடலொன்று இல்லாது ஓய்வூதிய சுற்றிக்கைகள் மூலமாக மாத்திரம் மீள்கட்டமைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- முதலாவது ஓய்வூதியம், ஆரம்ப சட்டரீதியான ஆவணமான ஓய்வூதிய வழங்கல் பணத்தினை வழங்குவதற்கு முன்னர் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பான நாளதுவரையாக்கப்பட்ட கட்டமைப்பொன்று இல்லாதிருந்தமையால் விண்ணப்ப படிவத்தினை சான்றுறுதிப்படுத்தும் நடைமுறையொன்று இல்லாதிருந்தது.

- பிரதேச செயலாளர் அலுவலகங்களால் பேணப்பட்டிருந்த ஓய்வூதியதாரர்கள் தொடர்பான தரவுத் தளத்தில் (Database) பல்வேறு

குறைபாடுகள் நிலவிய போதிலும், அதனை கவனத்திற் கொள்ளாமல் அந்த தரவுத் தளங்களை (Database) ஒன்றிணைத்து மத்தியப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், நிலவிய குறைபாடுகள் புதிய மத்தியப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பினுள்ளும் காணப்பட்டன.

- ஓய்வூதியம் பெற்றோர் தொடர்பான கணக்கெடுப்பொன்றினை மேற்கொண்டு மத்தியப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பின் ஓய்வூதிய ஆவணக் கோவை, ஓய்வூதிய ஆவணக் கோவை மற்றும் மத்தியப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பு ஆகியவற்றுக்கிடையேயான தொடர்பினை உறுதி செய்து மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- புதிய ஓய்வூதிய தரவுக் கட்டமைப்பில் 2008 ஆம் ஆண்டிலிருந்தான தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், தரவுகள் இல்லாதிருந்த காலப்பகுதியொன்றும் காணப்பட்டது.

- ஓய்வூதியங்களை செலுத்துவதற்குரிய தரவுகள், தரவுக் கட்டமைப்பிற்குள் உட்படுத்தப்பட்டதன் பின்னர் அந்த தரவுகள் பதவிநிலை உத்தியோகத்தரொருவரால் செல்லுபடியாக்கப்படாமை (Data Validation) மற்றும் தரவுக் கட்டமைப்பினுள் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் அங்கீகரிக்கக்கூடிய ஆகக்கூடிய கொடுப்பனவு எல்லை நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

- மத்தியப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பினுள் 2015 திசெம்பர் மாதத்தின் இறுதி வரையிலும் 90,000 ஓய்வூதியத்தாரர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- ஓய்வூதியத் திணைக்களத்தால் ஓய்வூதிய இலக்கங்களை விநியோகித்தல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சிவில் ஓய்வூதிய இலக்கம் 1,100,000 தொகுதிக்கு மேற்பட்ட இலக்கங்களை வழங்குதலை பரிசோதனை செய்த போது இரு ஓய்வூதியதாரர்களுக்கு ஒரே ஓய்வூதிய இலக்கங்கள் வழங்கப்பட்டிருந்த 678 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறே ஒரே ஓய்வூதிய இலக்கம் மூன்று ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

- தகவல்களின் பற்றாக்குறையொன்று தரவுக் கட்டமைப்பினுள் நிலவுகின்றமையால் தரவுக் கட்டமைப்பிற்கு கட்டுப்பாட்டு முறைமைகளை தாபிக்க முடியாது போயிருந்தது.

- பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மத்தியப்படுத்தப்பட்ட ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- கணனி ஆலோசனை சேவைகளை முறையாக பெற்றுக் கொண்டிராமையால் பின்வரும் குறைபாடுகள் இடம்பெற்றிருந்தன.

- ஓய்வூதிய நலன்களை வழங்குவதனை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு தேவைப்படும் கணனி நிகழ்ச்சித்திட்ட மதியுரை சேவையினை பெற்றுக் கொள்வதற்காக திணைக்களத்தால் நிரந்தரமான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அரச

சேவையிலிருந்து ஓய்வு பெற்ற நபரொருவரிடமிருந்து அந்த சேவையினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- மேற்படி சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக மதியுரையாளர் மற்றும் திணைக்களத்திற்கிடையே 2012 சனவரி 05 ஆந் திகதி சேவை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், அந்த உடன்படிக்கையில் செல்லுபடியான காலப்பகுதியொன்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

- ஓய்வூதிய நலன்களை செலுத்தும் பணிகள் தனி நபரொருவரால் வழங்கப்படுகின்ற தகவல் தொழில்நுட்ப மதியுரை சேவையின் அடிப்படையில் தங்கியிருக்கும் சந்தர்ப்பமொன்றில் தடுக்க முடியாத காரணங்களின் அடிப்படையில் அந்த சேவையினை வழங்க வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற சேவைகளுக்கு தடைகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்பட்டது.

- தகவல் தொழில்நுட்ப மதியுரையாளர், மென்பொருள் நிர்மாணிப்பு மற்றும் ஓய்வூதியம் செலுத்துதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய தரவுக் கட்டமைப்பின் பணிகளில் ஈடுபட்டுள்ளமையால் ஓய்வூதியம் செலுத்தும் நடைமுறையானது உள்ளகப் பரிசோதனையொன்று இல்லாது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) மத்திய வங்கியால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓய்வூதிய பங்களிப்பு தொகை மற்றும் வட்டி**

2002 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய பங்களிப்பு ஓய்வூதிய முறைமையின் கீழ் அறவிடப்பட்டு மத்திய வங்கியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 1,127.13 மில்லியன் தொகை மற்றும் அதற்குரிய வட்டியை 2016 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.17 மனிதவள முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 20 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | - | 11 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,076 | 901 | 175 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 75 | 52 | 23 | - |
| (v) | ஏனையோர் (அமைய /தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 11 | - | 11 |
| | மொத்தம் | 1,186 | 984 | 213 | 11 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

(i) 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மீள்கட்டமைத்தலின் கீழ் மாற்றமடைந்த நிறுவனக் கட்டமைப்பின் பிரகாரம் தேவையான பதவியணியினர் குறிப்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்**

திணைக்களத்தினால் ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கபடுகின்றன.

| **ஊழியர் வகை** | **எண்ணிக்கை** | **ஏனைய தரப்பினர்** | **காலப்பகுதி** |
|---|---|---|---|
| பெண் பொலிஸ் சார்ஜன்ட் | 1 | பொலிஸ் திணைக்களம் | 2010.06.08 முதல் |
| பெண் பொலிஸ் கான்ஸ்டபள் | 1 | பொலிஸ் திணைக்களம் | 2012.02.24 முதல் |
| பெண் பொலிஸ் கான்ஸ்டபள் | 3 | பொலிஸ் திணைக்களம் | 2015.06.25 முதல் |